மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் பரவி வருகிறது என்பதைக் கேள்விப்பட்டவுடன் துறை அதிகாரிகளுக்கு உடனடியாக உத்தரவுகள் வழங்கி, அங்கிருந்து எந்த வாகனம் வந்தாலும், வாகனங்களில் பறவைகள் வந்தாலும், கோழிகள் வந்தாலும், எதுவும் உள்ளே வரக்கூடாது என்ற வகையிலே அனைத்து வாகனங்களுக்கும் கிருமிநாசினி மருந்து தெளித்து, நோய் பரவக்கூடாது என்கிற வகையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பகுதியிலும் அவ்வாறுதான் செய்திருக்கிறோம். அந்த வகையிலே, பணிகளைச் செய்வதற்கான உத்தரவுகளை வழங்கி, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களால், பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (குறுக்கீடு)

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வண்டி வரக்கூடாது என்பதற்காக அல்ல, வண்டியில் நோய் வந்துவிடக் கூடாது என்பதற்காக மருந்து தெளித்து அனுப்புகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

46—

விசைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள்

***83459—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, ஆங்குணம் கிராமத்தில் விசைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2024 பிப்ரவரி 22]

2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, "ஆண்டுக்கு ரூபாய் 21 கோடி செலவினத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூபாய் 4.00 இலட்சமாக உயர்த்தி, நகர்ப்புற நெசவாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.

மேற்காணும் அறிவிப்பைச் செயல்படுத்தும்பொருட்டு, 3–3–2023 அன்று நிர்வாக அனுமதியும், கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, கைத்தறி நெசவாளர்களுக்கு மானியத்துடன்கூடிய வீடுகள் கட்டும் திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. விசைத்தறி நெசவாளர்களுக்கு மானியத்துடன்கூடிய வீடுகள் கட்டுவது தொடர்பாக கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்காக, கைத்தறியில் நெய்யப்பட்ட துணிகளை பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞர் அவர்களும் விற்று, நெசவாளர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டுமென்று, வறுமையில் வாடுகின்ற நெசவாளர்களுக்காகப் பாடுபட்டார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, கைத்தறி நெசவாளர்களுக்கு சென்னிமலையிலே ஆயிரம் வீடுகள் ஒரே நேரத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டன. அதேபோல, என்னுடைய மாவட்டத்தில், எனது தொகுதியில் ஏழை கைத்தறி நெசவாளர்கள் வாழும் ஆங்குணம், தண்டரை, இராயம்பேட்டை, ஆரணி, நெடுங்குணம் மற்றும் பல்வேறு நெசவாளர் கிராமங்கள் இருக்கின்றன. அதுபோல, ஆயிரம் வீடுகள் ஒரே இடத்திலே கட்டுவதற்குத் தேவையான இடமும் எங்களுடைய மாவட்டத்திலே இருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெசவாளர்களுக்கு ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கான அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவாரா? குறிப்பாக, பேரறிஞர் அண்ணாவை ஆதரித்த நெசவாளர்களுக்கு, வறுமையிலே வாடுகின்ற அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கை வைக்கிறேன். ஒரு வீட்டின் மதிப்பு எவ்வளவு? இப்போது எத்தனை வீடுகள்*

கட்டப்பட்டிருக்கின்றன? அதைப்போல தொடர்ந்து எங்கள் பகுதியிலே வீடுகள் கட்டப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நிறைய correct ஆன கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் எப்படி செயல்படுகிறார்கள் என்பதை அறிந்துதான் கிராம கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகையை ரூபாய் 2 இலட்சத்து 52 ஆயிரத்திலிருந்து ரூபாய் 4 இலட்சம் ஆக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். நகர்ப்புற கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகையை ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 4 இலட்சமாகவும் உயர்த்தி வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் உங்களுக்குத் தெரியும். கைத்தறி நெசவு செய்பவர்கள் பள்ளத்தில் உட்கார்ந்துகொண்டு நெசவு செய்வார்கள். அந்த வீட்டில் 4 அடி பள்ளம் இருக்கும். இப்போது அதை மாற்றி, கூரையின் உயரம் 12 அடியாக்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவற்றிற்கு கூரையின் உயரம் 10 அடியாகவும், 4 இலட்சம் ரூபாயாக தொகையினை உயர்த்தியும் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல, விசைத்தறி நெசவாளர்களுக்கும் கேட்டார்கள். தமிழ்நாட்டில் உள்ள விசைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக இவ்வரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம் கலைஞர் ஆட்சிக் காலத்தில் 2006–2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இரு மாதங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் விலையில்லா மின்சாரம் 750 யூனிட்டிலிருந்து 1,000 யூனிட்டாக 3–3–2023 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் 1,65,028 விசைத்தறி நெசவாளர்கள் பயன்பெறுகின்றனர்.

அதேபோல, 5,000 விசைத்தறிகளின் உற்பத்தி மற்றும் தரத்தினை மேம்படுத்த, ரூபாய் 12 கோடி செலவில் Electronic Panel Board நிறுவப்பட்டு வருகிறது. விசைத்தறித் தொழிலினை மேம்படுத்திட, விசைத்தறி கணக்கெடுப்பு, மின் வணிகம் (e-Commerce), தகவல்

2024 பிப்ரவரி 22]

பரிமாற்றம் ஆகிய பணிகளை மேற்கொள்ள Geo-Tagging *செய்ய ரூபாய் 10 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.*

முற்பகல் 10–50

பள்ளி மாணவர்களுக்குச் சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் சீருடை துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆங்குணம் கிராமத்திலுள்ள விசைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்கெனவே நடைமுறையில் உள்ள PM AWAS YOJANA *திட்டத்தின்கீழ் தகுதிக்குட்பட்ட விசைத்தறி நெசவாளர்களுக்கு மானியத்துடன் வீடுகள் கட்டித்தர ஆவன செய்யப்படும். அதுமட்டுமல்லாமல், நேற்று மாலை நான் அவையில் இல்லை. மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு. தங்கமணி அவர்கள் பேசும்போது கடந்த 3 ஆண்டுகளில் இலவச வேட்டி சேலைகள் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும், பொதுவாகவே, 2007 ஆம் ஆண்டிலிருந்து இல்லை. 2012–ல் உங்கள் ஆட்சியில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள், என்ன செய்திருக்கிறோம் என்பதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள், என்ன செய்திருக்கிறோம் என்பதை பதிலாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *இல்லை. (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அதற்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) 2012–ல் பத்தாவது மாதம்தான் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதற்கும் வருகிறேன். (குறுக்கீடுகள்) இதைச் சொல்லிவிட்டு அதற்கு வருகிறேன். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) அவசரப்படாதீர்கள். (குறுக்கீடுகள்) அவசரப்படாதீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *3 ஆண்டுகள் நாங்கள்* late *ஆகக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொஞ்சம் கவனித்துக்கொள்ளுங்கள். நேற்று தங்கமணி அண்ணன் அவர்கள் ஒரு கேள்வி கேட்டார்கள், அதற்குரிய பதிலை மட்டும் சொல்லுங்கள். மற்றவற்றை demand-ல் பிறகு பேசிக்கொள்ளலாம். அந்த ஒரு பதிலை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர்கள், நாம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நாம் கொடுத்தோம் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: அடுத்து, அவர் என்ன சொல்கிறார் என்றால்—இத்தனை வருடங்களில், இந்த வருடம்தான் first time டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் கொடுத்திருக்கிறோம். மற்ற எல்லா வருடங்களையும் பார்த்தீர்களென்றால் 10-வது மாதம், 8-வது மாதம் வரை கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மட்டும் பதிவு செய்கிறீர்கள். ** (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள். . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவைத் தலைவர் பற்றி கூறியதை எல்லாம் நீக்கிவிடுகிறேன். நீங்கள், நேற்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் தங்கமணி கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: தாலுகா அலுவலகங்களில் மூட்டை மூட்டையாகக் கட்டி வீணாக வைத்துள்ளார்கள் என்று சொல்கிறார்கள். எந்த இடம், எந்த தாலுகா என்று குறிப்பிட்டுச் சொன்னால், revenue துறை அதிகாரிகளிடம் சொல்லி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். பொதுவாகச் சொல்லாதீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: அப்படி இருந்தால் சொல்லுங்கள்; நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) எதற்குச் சொல்கிறோம் என்றால், எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் அப்படி இல்லை. நாங்கள் யாராக இருந்தாலும் நியாயமாக நடந்துகொள்வோம். நிஜத்தில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2024 பிப்ரவரி 22]

பார்த்தோம் என்றால், நாங்கள் தி.மு.க. ஆட்சியில் இருக்கிறோமா அல்லது ADMK ஆட்சியில். . . (குறுக்கீடு) நீங்கள்தான் நன்றாக அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உடனுக்குடன் பதில் சொல்வதற்கு உங்களுக்குத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் time கொடுக்கிறார். இதை யார் பேசியிருந்தாலும் நான் ஏற்றுக்கொள்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் தங்கமணி அவர்கள் மேல் எனக்கு நல்ல நம்பிக்கை உள்ளது. அவர் சாதாரணமாக இதுபோன்று தவறான தகவலைச் சொல்ல மாட்டார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) உட்காருங்கள். நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். தவறான பதிவு ஒன்றும் இல்லை. உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உங்களை நன்றாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களைப் பாராட்டித்தான் சொல்லியிருக்கிறார்கள். உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு விளக்கங்களை இங்கே வழங்கினார்கள். பொங்கல் பண்டிகைக்கு முன்பாகவே வேட்டி சேலை வழங்கியது, தலைவர், தளபதி, மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்கள் பொறுப்பேற்ற இந்த ஆட்சிக் காலத்திலேதான் அனைத்து மக்களுக்கும் பொங்கல் பண்டிகைக்கு முன்பாகவே வேட்டி சேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், விசைத்தறித் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் எங்கள் பகுதியிலே அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வீடுகள் வழங்க வேண்டியது மிக முக்கியத் தேவையாக இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் வழங்கப்படக்கூடிய தொகையைக் கூடுதலாக வழங்கி துறையின் நிதியோடு இணைத்து அவர்கள் வீடுகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

[2024 பிப்ரவரி 22

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நிச்சயமாக நான் வாய்ப்பு தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) நிச்சயமாக நான் வாய்ப்பு தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார். . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். கேள்வி நேரம் முடிந்த பிறகு பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். நான் சொல்கிறேன். அனைவரும் உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். நான் நடவடிக்கைக் குறிப்பைக் கேட்டிருக்கிறேன். அவைக் குறிப்பில் நீக்க வேண்டியிருந்தால் நான் நீக்கிவிடுகிறேன். கேள்வி நேரம் முடிந்தவுடன் நான் அதைப் பார்க்கிறேன். நான் கேட்டுவிட்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயகுமார் அவர்கள். . . (குறுக்கீடுகள்) தம்பி உதயகுமார், நான் சொல்வதைக் கேளுங்கள் என்று சொல்கிறேன். வினாக்கள்–விடைகள் நேரம் முடியட்டும், நான் நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்து தவறான வார்த்தை இருக்குமானால் அதனை நீக்கிவிடுகிறேன் என்று சொல்லிவிட்டேன். உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் தருகிறேன் என்று சொன்ன பிறகும் ஏன் கேட்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

47—

பேருந்து வசதி

***52699—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—